தொல்காப்பிய மன்றம் - கனடா
Association for Tolkappiyam - Canada
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024

## பொது அறிவுப் போட்டி (வினா-விடை): வகுப்பு - 04 (2014-இல் பிறந்தோர்)

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களில், போட்டியில் கேட்கப்படும் வினாக்களுக்குத் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியானதைத் தெரிவு செய்ய வேண்டும்.**

1. தமிழ் எழுத்துக்களின் வகைகள் எவை?
   1. உயிர் எழுத்து 2. மெய் எழுத்து 3. உயிர்மெய் எழுத்து 4. ஆய்த எழுத்து

2. தமிழ் மொழியின் உயிர் எழுத்துக்களில் குறில் எழுத்துகள் எத்தனை?
   ஐந்து (5)

3. தமிழ் மொழியின் மெய் எழுத்துக்கள் எத்தனை?
   பதினெட்டு (18)

4. தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
   இருநூற்று நாற்பத்தேழு (247)

5. தமிழ் மொழியில் எத்தனை உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன?
   இருநூற்றிப் பதினாறு (216)

6. வல்லின மெய்யெழுத்துக்கள் எவை?
   க், ச், ட், த், ப், ற்

7. இடையின மெய்யெழுத்துக்கள் எவை?
   ய், ர், ல், வ், ழ் ள்

8. மெல்லின மெய்யெழுத்துக்கள் எவை?
   ங், ஞ், ண், ந், ம், ன்

9. இயல், இசை, நாடகம் என்பவற்றை எவ்வாறு அழைப்பார்கள்?
   முத்தமிழ்

10. பண்டைய தமிழ் இலக்கண நூல் எது?
    தொல்காப்பியம்

11. தொல்காப்பியத்தில் உள்ள மூன்று அதிகாரங்களும் எவை?
    எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

12. முப்பால் நூல் என அழைக்கப்படும் நூல் எது?
    திருக்குறள்

13. திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளும் எவை?
அறம், பொருள், இன்பம்

14. திருக்குறளில் ஒரு அதிகாரத்தில் எத்தனை குறட் பாக்கள் உள்ளன?
பத்து (10)

15. ஔவையார் எழுதிய நூல்களில் ஒன்றன் பெயரைத் தருக?
ஆத்திசூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நல்வழி.

16. ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த மன்னன் யார்?
அதியமான்

17. முல்லைக்குத் தேர் ஈந்த மன்னன் யார்?
பாரி

18. தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களும் எவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி

19. மணிமேகலை என்னும் நூலை இயற்றியவர் யார்?
சீத்தலைச் சாத்தனார்

20. கண்ணகி கதையைப் பாடும் பெருங்காப்பியத்தின் பெயர் யாது?
சிலப்பதிகாரம்

21. கம்பராமாயணத்தை இயற்றியவர் யார்?
கம்பர்

22. யாழ் நூலை எழுதியவர் யார்?
சுவாமி விபுலாநந்தர்

23. ஆறுமுகநாவலர் எழுதிய பாடநூல்களுள் ஒன்றைக் கூறுக?
பாலபாடம், பாலபோதினி

24. 'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே...' என்ற பாடலைப் பாடியவர் யார்?
சுப்பிரமணிய பாரதியார்

25. மகாகவி உன அழைக்கப்படும் ஈழத்துக் கவிஞர் யார்?
மகாகவி உருத்திரமூர்த்தி

26. வன்னியை ஆண்ட இறுதி மன்னன் யார்?
பண்டாரவன்னியன்

27. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னன் யார்?
சங்கிலியன்

28. ஐம்பொறிகள் எவை?
1. மெய் 2. வாய், 3. கண், 4. மூக்கு, 5. செவி

29. ஐம்பெரும் பூதங்கள் எனப்படுபவை எவை?
1. நிலம் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வானம்.

30. மஞ்ஞை என்ற சொல் குறிக்கும் பறவை எது?
மயில்

31. ஞமலி என்னும் சொல் குறிக்கும் விலங்கு எது?
நாய்

32. ஆண் யானையைக் களிறு என்பதுபோல பெண்யானையை எவ்விதம் அழைப்பர்?
பிடி

33. 'ஆ' எனப்படும் வீட்டு விலங்கு எது?
பசு

34. கணவன் என்பதன் பெண்பால் சொல் என்ன?
மனைவி

35. கிளவி என்பதற்கான ஒத்த சொல் ஒன்றைத் தருக?
சொல், பதம், மொழி

36. காராளர் அல்லது ஏராளர் என அழைக்கப்படுபவர் யார்?
உழவர்

37. உழவன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
உழத்தி

38. தமிழரின் தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக
சிலம்பாட்டம், களரி

39. தமிழரின் வீரவிளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக?
ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு)

40. வீதி என்பதற்கு ஒத்த வேறுசொல் யாது?
பாதை

41. சூடிக்கொடுத்த நாச்சியார் என அழைக்கப்படுபவர் யார்?
ஆண்டாள்

42. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
மறைமலை அடிகள்

43. தாய் என்பதற்குரிய ஒத்தசொல் ஒன்றைக் கூறுக?
அம்மா, அன்னை, ஐயை

44. Fever என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
காய்ச்சல்

45. Cancer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
புற்றுநோய்

46. Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
ஒவ்வாமை

47. Diabetes என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
நீரிழிவு

48. Mother tongue என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?
தாய்மொழி

49. Grammar என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
இலக்கணம்

50. Bank என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
வைப்பகம்

51. Laptop Computer என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
மடிக் கணினி

52. Internet என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையம்

53. Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையத்தளம்

54. Font என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
எழுத்துரு

55. Browser என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையஉலாவி

- மேலே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மேலதிகமாகவும் தேர்வின் போது வினாக்கள் கேட்கப்படும்.
- போட்டியாளர்களின் தரவரிசையை (1ம், 2ம், 3ம் இடங்களை) நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படின் அம்மேலதிக வினாக்களின் புள்ளிகள் கருத்திற் கொள்ளப்படும்.